## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

18–03–2025 நிகழ்வுகள்



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

### 1. விவசாய குளிர்பதன சேமிப்பு கிடங்குகளுக்கான மானியம்

**கனிமொழி கருணாநிதி**



நாடு முழுவதும் காய்கறிகளை சேமிக்க குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் உருவாக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் மூலதன முதலீட்டு மானியம் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி மக்களவையில் கேள்வி எழுப்பியதோடு ஒன்றிய அரசுக்கு கோரிக்கையும் வைத்துள்ளார்.

அதில் அவர், தமிழ்நாட்டில் தற்போதுள்ள குளிர் சேமிப்பு வசதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் சேமிப்பு திறன் விவரங்கள்,

குளிர் சேமிப்புக் கிடங்குகளின் கட்டுமானம், விரிவாக்கம், நவீனமயமாக்கல் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களுக்கான மூலதன முதலீட்டு மானியம் என்ற தலைப்பிலான திட்டத்தின்கீழ் நீட்டிக்கப்பட்ட கடன்–இணைக்கப்பட்ட மானியத்தின் விவரங்கள்,

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய குளிர்பதன சேமிப்பு வசதிகளின் விவரங்கள் ஆகியவற்றை வெளியிட கோரியுள்ளார்.

### 2. பன்மடங்கு அதிகரித்திருக்கும் சைபர் குற்றங்கள் - நடவடிக்கை என்ன?

**ஈஸ்வரசாமி**



கடந்த மூன்றாண்டுகளில் இணையவழி குற்றங்கள் பலமடங்கு அதிகரித்திருந்தும் அவற்றை தடுக்க ஒன்றிய அரசு போதிய நடவடிக்கைகள் எடுக்காததை குறித்து மக்களவையில் பொள்ளாச்சி தி.மு.க. எம்.பி. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிக அளவு வங்கி பரிவர்த்தனைகளில் சைபர் குற்றங்கள் நடப்பதாகவும் அன்றாடம் அதனால் பாதிக்கப்படுபவர்களில் முதியவர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் அதிகம் இருப்பதாகவும் குறிப்பிட்டு தடுப்பு நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ள திட்டங்கள் யாவை என கேட்டிருக்கும் அவர், உயர் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தவும் அறிவுறுத்தியிருக்கிறார்.

உலகளவில் நடக்கும் குற்றங்களை தடுக்கவும் இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளார்.

### 3. விவசாயிகளுக்கான தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

**ஆ. மணி**



விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் தொழில் செய்பவர்களுக்கு திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களின் விவரங்கள் கேட்டு தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற தொடர்புடைய துறைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு திறன் பயிற்சி அளிக்க உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்கள் மற்றும் அதனால் பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை விவரங்கள், இந்த முயற்சிகள் விவசாய உற்பத்தித்திறனையும் விவசாயிகளின் வருமானத்தையும் உயர்த்திருப்பதை உறுதிசெய்யும் ஆய்வுகளை அரசாங்கம் நடத்தி இருந்தால் அதன் குறிப்புகள் மற்றும் இந்தப் பயிற்சித் திட்டங்களில் நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளை அறிமுகப்படுத்த அரசிடம் உள்ள திட்டங்களின் விவரங்கள் ஆகியவற்றை வெளியிடுமாறு அ. மணி எம்.பி. அவர்கள் கேட்டுள்ளார்.

### 4. மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தின் நிலை என்ன?

**திருச்சி சிவா**



மதுரை மெட்ரோ திட்டத்திற்கு மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தொடங்கிவிட்டதா என மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ள தி.மு.க. எம்.பி. திருச்சி சிவா, திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் ஒப்புதல் அளிப்பதற்கான காலக்கெடு போன்ற விவரங்களையும் கேட்டுள்ளார். மற்ற நகரங்களில் உள்ள மெட்ரோ திட்டங்கள் விரைவான ஒப்புதல்களைப் பெற்றுள்ள நிலையில் மதுரை மெட்ரோ திட்டம் மட்டும் அங்கீகரிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? சர்வதேச நிதியைப் பெறுவதற்கான தற்போதைய நிலை மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) வெளிப்படுத்திய ஆர்வத்தை திட்டத்தின் நிதி திட்டமிடலுடன் ஒருங்கிணைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்கிற கேள்விகளுக்கும் அவர் நாடாளுமன்றத்தில் பதில் கேட்டுள்ளார்.

### 5. நாட்டுப்புற, பழங்குடியின கலைகளை காக்க கோரிக்கை

**ஆ. மணி**

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நாட்டுப்புற மற்றும் பழங்குடி இன கலைகளை பாதுகாப்பது குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார் தி.மு.க. எம்.பி. அ. மணி.

கேள்விகள் விவரம் பின்வருமாறு:

அ) பழங்கலைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஏழு மண்டல பண்பாட்டு மையங்களின் (ZCCs) நோக்கங்கள் என்ன?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு மண்டல பண்பாட்டு அரங்கமும் மேற்கொண்ட செயல்பாடுகள், திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளின் விவரங்கள்?

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு மண்டல அரங்கமும் ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்திய மொத்த நிதி

(ஈ)அழிந்து வரும் பழங்குடி மற்றும் நாட்டுப்புற கலை வடிவங்களை டிஜிட்டல் முறையில் காப்பகப்படுத்த, ஆவணப்படுத்த அல்லது ஊக்குவிக்க அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள்

(இ) இந்தியாவின் பன்முக பண்பாட்டு பாரம்பரியத்தை சிறப்பாகப் பாதுகாப்பதற்காக மண்டல அரங்கங்களின் செயல்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள்யாவை மேலும்தனியார்நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுவது குறித்து முன்மொழியப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

### 6. NLC ஒப்பந்த தொழிலாளர்களின் அவலநிலை!

**ஆர். கிரிராஜன் கண்டனம்**



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் (NLC) பணியமர்த்தப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள்/ஊழியர்களின் தற்போதைய அவலநிலையை ஒன்றிய அரசு கண்டுக் கொள்ளாமல் இருப்பதை சுட்டிக்காட்டி மாநிலங்களவையில் திமுக எம்.பி. ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். NLC இல் பணிபுரியும் தினசரி கூலித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 20–24 நாட்கள் வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ள அவர், NLCஇல் பணிபுரியும் மொத்த ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஊதியத்தின் விவரங்கள் வெளியிட வேண்டும் என்றும் NLCஇல் உள்ள மொத்த நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட சம்பள விவரங்களும் வெளியிட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

### 7. வீட்டுக் கழிவுகள் அப்புறப்படுத்த நடவடிக்கை

**டாக்டர் கனிமொழி சோமு**



கழிவு மேலாண்மை செய்யப்படாத வீட்டுக் கழிவுகளின் அளவு ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதை தடுக்க ஒன்றிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்து அச்சம் தெரிவித்திருக்கிறார் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு.

ஏற்கனவே பயோ–மைனிங் ஒப்பந்ததாரர்கள் தாங்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவைவிட மிகக் குறைவான அளவு கழிவுகளையே சுத்திகரிப்பு செய்கிறார்கள். அதை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வீட்டுக் கழிவுகளை செயலாக்குவதை விரைவுபடுத்தவும், தேங்கி நிற்கும் கழிவுகளை அப்புறப்படுத்தவும், நாள்தோறும் குவியும் கழிவுகளை விரைவில் சுத்திகரிக்கவும் நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைத்துள்ளார்.

### 8. சிறுபான்மை இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு!

**எம்.எம்.அப்துல்லா**



நாட்டில் சிறுபான்மையின இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலம் நிலையான வேலைவாய்ப்புகளைப் பெற உதவிடும் கரீப் நவாஷ் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி. எம்.எம். அப்துல்லா ஒன்றிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநில வாரியாகவும், ஆண்டு வாரியாகவும், கரீப் நவாஸ் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கையின் விவரங்கள், அதே ஆண்டுகாலத்தில் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்ததற்கான காரணங்கள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை முதலியவற்றை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார். குறிப்பாக கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பலவீனமான சிறுபான்மை சமூகங்களில், திட்டத்தின் வரம்பை விரிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.

---

## புதுச்சேரி அரசுப் பள்ளி சிறப்பு

# ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வலியுறுத்தல் !

புதுச்சேரி, மார்ச் 20-

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்றைய பூஜ்ஜிய நேரத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசியதாவது:-

புதுச்சேரி அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த சிறப்பு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக நான்கு பிராந்தியங்களிலும் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு அரசு மூலம் தேர்வு செய்த 24 சிறப்பு ஆசிரியர்கள் ஒப்பந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

அவர்கள் தங்கள் நிலையை அரசிடம் எடுத்துச் சொல்லி தங்களை பணி நிரந்தம் செய்ய தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். மேலும், ஓய்வூதிய வயதை எட்ட இன்னும் சில ஆண்டுகள் உள்ள நிலையில் பணியாற்றும் ஒப்பந்த சிறப்பு ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய சட்டமன்றத்தில் நாங்கள் கோரிக்கை வைத்தபோது, முதல்வர் அவர்கள் அவர்களை பணி நிரந்தரம் செய்வதாக உறுதியளித்தார். ஆனால் இன்று வரை அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை.

சிறப்பு ஆசிரியர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் சிக்கிம், நாகாலாந்து, மணிப்பூர், அருணாச்சல பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் சிறப்பு ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்துள்ளது.

ஆனால் புதுச்சேரி அரசு தீர்ப்பின் அடிப்படையில் கண், காது, நரம்பு, மூளை வளர்ச்சி குறைபாடு உள்ள குழந்தைகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவு சிறப்பு குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க 160 சிறப்பு ஆசிரியர்களை நிரப்புவதற்கான ஆர் ஆர் டிராப்ட் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே பணியாற்றும் தங்களின் நிலை குறித்து சிறப்பு ஆசிரியர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ஆகவே, அவர்களின் அச்சத்தை போக்கும் வகையில் புதுச்சேரி அரசு 24 சிறப்பு ஆசிரியர்களையும் கருணை அடிப்படையில் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

---

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் போற்றும் மனித நேய தலைவர் திராவிடத் தலைவன் தமிழ்நாடு முதலமைச்சர்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்த நாள் விழா!



### நலத்திட்ட உதவிகள் மற்றும் தொடர் பொதுக்கூட்டங்கள் – நிகழ்ச்சிகள்

**விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

| நாள் | இடம் | உரையாற்றும் சிறப்பு பேச்சாளர்கள் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|---|
| 22.03.2025 சனி | வைரபுரம் | திருமதி.ஆரணி மாலா | அ.ராஜாராம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 23.03.2025 ஞாயிறு | ஓங்கூர் | பவானிகண்ணன் | கோ.சொக்கலிங்கம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 29.03.2025 சனி | கூட்டேரிப்பட்டு | ஆவடிபாஸ்கர் | ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 30.03.2025 ஞாயிறு | புலியனூர் | ஆம்பூர் தருமன் | V.மணிமாறன் மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் |
| 05.04.2025 சனி | நெடிமொழியனூர் | குமரி பிரபாகரன் | ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 06.04.2025 ஞாயிறு | வடநெற்குணம் | ஆத்தூர் சபரி | வ.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 12.04.2025 சனி | பென்னகர் | சன் சங்கர் | அ.சீ.அண்ணாதுரை வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் |
| 13.04.2025 ஞாயிறு | கீழ்புத்துப்பட்டு | கோவை துரைமுருகன் | ஆர்.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 19.04.2025 சனி | கீழ்எடையாளம் | நெல்லை ஜான் | A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 20.04.2025 ஞாயிறு | பெரியதச்சூர் | திருமதி.சேலம் சுஜாதா | ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 26.04.2025 சனி | மானூர் | எழும்பூர் கோபி | A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 27.04.2025 ஞாயிறு | கொல்லியங்குணம் | நாகமை கருப்பையா | செழியன் மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர் |

எனவே ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: கூட்ட நிகழ்ச்சியில் நலத்திட்டங்கள் வழங்கிட இடம் மற்றும் நாள் உறுதிபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**
மாவட்டப் பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்டம்

---

## அவலூர்பேட்டை நகர தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# ரூ. 5 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, மார்ச் 20-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் அவலூர்பேட்டை நகர தி.மு.க. சார்பில் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 3072நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி அவலூர்பேட்டை முருகன் கோவில் அருகில் நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

அவலூர்பேட்டை நகர நிர்வாகிகள் அர்ஷத், செல்வம், பாலு, மணியரசன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது எதப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த அருண்குமார் கனகவல்லி தம்பதியருக்கு பிறந்த பெண் குழந்தைக்கு தங்க மோதிரம் அணிவித்த செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குழந்தைக்கு தமிழ்ச் செல்வி என பெயர் சூட்டினார்.

தொடர்ந்து சோமாஸ்பாடி தனியார் கல்லூரியில் பி.எஸ்.சி. நர்சிங் நான்காம் ஆண்டு படிக்கும் அவலூர்பேட்டையைச் சேர்ந்த மோனிகா என்ற மாணவிக்கு நர்சிங் கல்லூரி படிப்பை தொடர்வதற்கு 2 லட்சத்து 43 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி 3,072 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் மரகன்றுகளை மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரை ஆற்றினார்.



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனையில் முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டிப் பந்தய விழாவில் மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் திலீப் ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு அமைச்சர்ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சார்பாக முதல் மாட்டிற்கு ரூபாய் 100072 பரிசுத் தொகையை வழங்கினார். உடன் மாநில தகவல் தொழில் நுட்ப துணை செயலாளர், முகவை மண்டல பொறுப்பாளர் மு.விஜய், கதிரவன், ஒன்றிய செயலாளர் செங்கமடை சரவணன் மற்றும் கழக முன்னணி நிர்வாகிகள், உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.

---

## மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய கழக செயலாளர்

# என். இளையபெருமாள் தாயார் என்.இராமாயி மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, மார்ச் 20-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் என். இளையபெருமாள் தாயார் என்.இராமாயி (வயது 85) அம்மையார் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த இராமாயி அம்மையாருக்கு மகன் என். இளைய பெருமாள், மகள்கள் பத்மாவதிபன்னீர்செல்வம், விஜயலெட்சுமிராசு ஆகியோர் உள்ளனர். சித்தமல்லி திம்மாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக இராமநாதபுரம் மாவட்ட பொறியாளர் அணி சார்பாக பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குமரகுடி அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ – மாணவியருக்கு நோட்டுப் புத்தகம் மற்றும் வாட்டர் பாட்டில் பேக் வழங்கும் நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் கலந்து கொண்டு வழங்கினார். உடன் மாவட்ட அமைப்பாளர் பாஸ்கர பாண்டியன் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.